# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : இந்திய வரலாறு மற்றும் கலாச்சாரம்

பகுதி : **சமண, புத்த சமயங்கள்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள்வடிவில்தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக்குறிப்புகளுக்கானகாப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# சமண, புத்த சமயங்கள்

வரலாற்றில் கி.மு. ஆறாம் நூற்றாண்டு மிகச் சிறந்த நூற்றாண்டாகக் கருதப்படுகிறது. உலகின் பலபகுதிகளிலும் சமயப் புரட்சியினையும் கண்டது. புத்தர், மகாவீரர், ஹெராக்ளிடஸ், சொராஸ்டர் (பாரசீகம்), கன்பூசியஸ் (சீனா), லா சே போன்ற சமய ஆசிரியர்களும், தத்துவஞானிகளும், சிறந்த சிந்தனையாளர்கள் வாழ்ந்து தங்களது கருத்துக்களை பரப்பியது இந்த நூற்றாண்டில்தான்.

இந்தியாவிலும் கி.மு. ஆறாம் நூற்றாண்டு பல மாற்றங்களைக் கண்டது.

## சமண, புத்த சமயங்கள் எழுச்சிபெறக் காரணங்கள்

கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இந்தியாவில் நிலவிய சமயம் சார்ந்த அமைதியின்மையே சமண, புத்த சமயங்களின் எழுச்சிக்கு முதன்மையான காரணமாகும்.

1. பழங்கால இந்தியாவில் சமய வாழ்க்கை எளிமை யானதாக இருந்தது. காலப் போக்கில் சடங்குகளும் வேள்விகளும் தோன்றின. அவை கடவுள் வழிபாட்டை சிக்கலாக்கின. ஏழை மக்களால் அவைகளைப் பின்பற்ற இயலவில்லை.
2. சமயம் தனது எளிமைத் தன்மையை இழந்துவிட்டது. சமய சடங்குகள் பெருகி செலவுச் சுமை கொண்டதாக மாறின.
3. சாதி முறை கடுமையானது. அது சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகளை உருவாக்கியது.
4. சமய இலக்கியங்கள் யாவும் சமஸ்கிருத மொழியில் இருந்தன. ஆனால் மக்கள் பாலி, பிராகிருத மொழிகள் பேசி வந்தனர். சாதாரண மக்களால் சமஸ்கிருத மொழியினைப் புரிந்து கொள்ள முடியவில்லை.
5. மிருக பலி சாதாரணச் செயலானது. மக்கள் அதனை விரும்பவில்லை.
6. வடகிழக்கு இந்தியாவில் புதிய வேளாண் பொருளாதாரம் நடைமுறைக்கு வந்ததே, இந்தப் புதிய சமயங்கள் தோன்றியதற்கு உண்மையான காரணமாகும்.

## சமண சமயம்


மகாவீரர்

- சமண சமயம் கி.மு.6 நூற்றாண்டில் தோன்றியது. சமண சமயத்தை வர்த்தமான மகாவீரர் தோற்றுவித்தார். ஆனால் சமணர்கள் தங்கள் சமயம் பல ஆண்டுகளுக்கு முன்பே ரிஷப தேவர் என்பவரால் தோற்றுவிக்கப் பட்டதாகக் கருதுகின்றனர்.
- ரிஷபதேவரைத் தொடர்ந்து 23 தீர்த்தங்காரர்கள் (சமயபோதகர்) இருந்தனர். மகாவீரர் 24-ஆவது தீர்த்தங்கரராவார். இந்தியாவின்

முதல் சக்ரவர்த்தியான பரதனின் தந்தைதான் ரிஷபதேவர் என்று நம்பப்படுகிறது.

| வ.எண் | தீர்த்தங்காரர்கள் பெயர் | உருவங்கள் (Symbol) சின்னம் |
|---|---|---|
| 1. | ரிஷப தேவர் | காளை |
| 2. | பார்சுவநாதன் | படமெடுக்கும் நாகபாம்பு (Hooded Serpent) |
| 3. | மகாவீரர் | சிங்கம் |

**வர்த்தமான மகாவீரர் வாழ்க்கை (கி.. 539 - கி.மு. 467)**

- வர்த்தமான மகாவீரர் சமண பரம்பரையில் 24-ஆவது தீர்த்தங்கரர்.
- வைசாலிக்கருகிலுள்ள குண்டக் கிராமத்தில், ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்த சித்தார்த்தருக்கும், திரிசலைக்கும் வர்த்தமானர் மகனாகப் பிறந்தார்.
- யசோதைஎன்றபெண்மணியைமணந்த அவர் அனோஜா பிரியதர்சனா என்ற பெண் மகளுக்கு தந்தையானார்.
- தமது 30-ஆவது வயதில் துறவறம் பூண்டு 12 ஆண்டுகள் தொடர்ந்து இடம் விட்டு இடம் பெயர்ந்தார்.
- தனது 42-ஆவது வயதில் **கைவால்யா** (Kaivalya) (கேவல ஞானம்) நிலையை அடைந்தார்.
- அதன்பின் அவர் மகாவீரர் என்றும், ஜீனர் என்றும் அழைக்கப்பட்டார்.
- அவரது சீடர்கள் சமணர்கள் எனப்பட்டனர். அவரது கருத்துக்கள் சமணம் என்று வழங்கப்பட்டது.
- முப்பது ஆண்டுகள் தொடர்ந்து தமது கருத்துக்களை மகாவீரர் பரப்பி வந்தார்.
- தமது 72-ஆவது வயதில் ராஜகிருகத்திற்கு அருகிலுள்ள பாவாபுரி என்ற இடத்தில் கி.மு. 468-ம் ஆண்டில் அவர் மறைந்தார்.

**மகாவீரரின் போதனைகள்**

- சமண சமயத்தின் மூன்று முக்கிய கோட்பாடுகள் மூன்று இரத்தினங்கள் எனப்படுகின்றன. அவை:

1. **நல்லறிவு:** நல்ல அறிவு என்பது கடவுள் இல்லை என்ற கோட்பாட்டை ஏற்றுக்கொண்டு, உலகத்தை படைத்தவர் எவருமில்லை என்பதையும் அனைத்து பொருட்களுக்கும் ஆன்மா உண்டு என்பதையும் உணர்ந்து கொள்வதாகும்.
2. **நன்னம்பிக்கை:** நல்லநம்பிக்கைஎன்பது, மகாவீரரின் கருத்துக்களிலும் பேரறிவிலும் நம்பிக்கை வைத்தலாகும்.
3. **நன்னடத்தை:** நல்ல நடத்தை என்பது ஐந்து முக்கிய விரதங்கள் கடைப்பிடிப்பதைக் குறிக்கும்.

அவை

ஐந்து ஒழுக்கங்கள்

1. ஊறு செய்யாமை - உயிர்களுக்கு தீங்கு விளைவிக்காமை
2. பொய்யாமை - பொய் உரைக்காமை
3. களவாமை - களவு செய்யாமை
4. உடைமை மறுத்தல் - சொத்துகளை கொள்வதை விடுத்தல்
5. புலனடக்கம் - ஒழுக்கமற்ற வாழ்வை நடத்தாமலிருத்தல்

- மேலே கூறப்பட்டுள்ள 5 ஒழுக்கங்களில் 5-ஆவது மட்டும் மகாவீரரால் கூறப்பட்டது மீதமுள்ள நான்கும் அவருக்கு முந்தைய ஆசிரியர்களால் கூறப்பட்டவை ஆகும்.
- சமண சமயம் அகிம்சை அல்லது உயிரினங்களுக்கு தீங்கு இழைக்காமையை மிக முக்கிய குறிக்கோளாக கடைப்பிடித்தது.
- சமண சமயம் கடவுள் இருப்பதை ஏற்றுக்கொண்டது ஆனால் ஜீனாவிற்கு கீழானவர் என்றது.
- உயிருள்ள, உயிரில்லா அனைத்து பொருட்களும் ஆன்மாவை பெற்றுள்ளன என்று மகாவீரர் கூறினார்.
- வேதங்களின் ஆதிக்கத்தை மறுத்த அவர், வேத சமயத்தின் சடங்குகளை எதிர்த்தார்.
- நிலம், மண் புழுக்கம், விலங்குகள் போன்றவற்றுக்கு தீங்கு விளைவதால் வேளாண்மை செய்வதுகூட பாவம் என அவர் கருதினார்.

## சமண சமயம் பரவுதல்

சமண சமயத்தை பின்பற்றிய அரசர்கள்

- சந்திரகுப்த மௌரியர்
- கலிங்கத்துக் காரவேலன்
- கூன் பாண்டியன்
- முதலாம் மகேந்திரவர்ம பல்லவர்
- சாளுக்கியர்கள்
- கங்கர்கள்
- கடம்பர்கள்

- தமது கருத்துக்களை பரப்புவதற்கு மகாவீரர் சங்கத்தை அமைத்தார்.
- அதில் ஆண், பெண் இருபாலரையும் சேருவதற்கு அனுமதித்தார். சங்கத்தில் துறவிகள் மற்றும் சாதாரண சீடர்களும் இருந்தனர்
- கி.மு. நான்காம் நூற்றாண்டின் இறுதியில் கங்கைச் சமவெளியில் கடும்பஞ்சம் ஏற்பட்டது.
- பத்ரபாகு மற்றும் சந்திரகுப்த மௌரியர் தலைமையில் பல சமணத் துறவிகள் கர்நாடகாவிலுள்ள சிரவண பெலகோலாவை வந்தடைந்தனர்.
- வடஇந்தியாவிலேயே தங்கிவிட்ட சமணத் துறவிகளுக்கு ஸ்துாலபாகு என்ற துறவி தலைமையேற்றர். துறவிகளுக்கான விதிமுறைகளை அவர் மாற்றியமைத்தார்.
- இதனால், சமண சமயம் இரண்டாக பிரிந்தது. ஒரு பிரிவினர் ஸ்வேதாம்பரர்கள் (வெள்ளையுடை அணிந்தவர்கள்) என்றும் மற்றொரு பிரிவினர் திகம்பரர்கள் (திசையையே ஆடையாகக் கொண்டவர்கள்) என்றும் அழைக்கப்பட்டனர்.
- கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், ஸ்வேதாம்பரர்களின் தலைவரான ஸ்துாலபாகு பாடலி புத்திரத்தில் முதலாவது சமண மாநாட்டைக் கூட்டினார்.
- கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாலாபியில் இரண்டாவது சமண மாநாடு நடைபெற்றது. பன்னிரண்டு அங்கங்கள் எனப்படும் சமண இலக்கியத்தின் இறுதி வடிவம் இம்மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## சமண சமயத்தின் தொண்டு

- சமண சமயம் பொதுமக்களின் மொழியான பிராகிருதத்தில் தனது கொள்கைகளைப் பரப்பியது.
- பாலி, பிராகிருதம், தமிழ் ஆகிய மொழிகளின் இலக்கிய வளர்ச்சிக்கு சமண சமயம் மிகப் பெரிய அளவில் தொண்டாற்றியுள்ளது.
- தமிழில் சிறந்த இலக்கியங்களாகக் கருதப்படும் திருத்தக்கதேவரின் சீவக சிந்தாமணி, பவநந்தி முனிவரின் நன்னூல் என்ற தமிழ் இலக்கணநூல் ஆகியன சமண சமயத்தைச் சார்ந்தவர்களால் எழுதப்பட்டவை. திருவள்ளுவரும் சமண சமயத்தைச் சார்ந்தவர் என்று கருதப்படுகிறது.
- அவர்களின் சமய இலக்கியங்கள் அர்த்தமகதி மொழியில் எழுதப்பட்டன.
- சமண சமயத்தில் ஆரம்ப கால முக்கிய தொகுப்பு அப்பிரம்சாவாகும் (Apabhramsha). இது முதல் இலக்கண நூலாகும்.
- குஜராத்தின் வரலாறு என்று நூலை எழுதிய ஹெமசந்திரர் என்ற மிகச் சிறந்த வரலாற்று அறிஞரும் சமண சமயத்தைத் தழுவியவர்.
- அங்கங்கள், பூர்வங்கள் ஆகிய நூல்கள் சமணர்களின் புனித நூல்களாகக் கருதப்படுகின்றன.

**சமணர்களின் தமிழ் இலக்கிய, இலக்கணப் படைப்புகள்**

**காப்பியங்கள்**

1. சிலப்பதிகாரம் 2. சீவக சிந்தாமணி 3. வளையாபதி 4.சூடாமணி

**இலக்கண நூல்கள்**

1. யாப்பருங்கலவிருத்தி 2. நேமிநாதம் 3. நன்னூல் 4. அகப்பொருள்
5. இலக்கண விளக்கம்.

**அறநூல்கள்**

1. நிகண்டுகள் 2. நாலடியார் 3.நான்மணிக்கடிகை 4. பழமொழி
5. திணைமாலை நூற்றைம்பது

**சமணக் கட்டக் கலை**

இராஜஸ்தான் - மவுண்ட் அபு —— தில்வாரா கோவில்

கஜூராஹோ, சித்துார், ரன்க்பூர் - சமணர் கோவில்கள்.

**சமண சமயத்தின் வீழ்ச்சிக்கு காரணங்கள்:**

- சமண சமயம் இந்தியா முழுமையும் பரவவில்லை. சமண சமயம் மிகத்தீவிரமான அகிம்சை முறைகளை போதித்ததால் சாதாரண மக்களால் அதனைப் பின்பற்ற முடியவில்லை.
- மேலும் அரசர்களின் ஆதரவு போதுமான அளவு கிடைக்காததும் ஒரு காரணம்.

## புத்த சமயம்

### கௌதம புத்தரின் வாழ்க்கை (கி.மு.567-கி.மு.427)


புத்தர்

- புத்த சமயத்தை நிறுவிய கௌதமர் அல்லது சித்தார்த்தர் கபிலவஸ்துவுக்கு அருகிலுள்ள லும்பினி தோட்டத்தில் கி.மு. 567-ஆம் ஆண்டு பிறந்தார்.
- சாக்கிய குலத்தைச் சேர்ந்த சுத்தோதனர் அவரது தந்தை. மாயாதேவி அவரது தாய்.
- சேயாக இருக்கும்போதே தாயை இழந்த சித்தார்த்தர் சிற்றன்னை பிரஜாபதி கௌதமி என்பவரால் வளர்க்கப்பட்டார்.
- தனது பதினாறாவது வயதில் யசோதரையை மணந்து கொண்ட அவர் ராகுலன் என்ற மகனுக்கு தந்தையானார்.
- வயோதிகர், நோயாளி, பிணம், துறவி ஆகியவற்றை கண்ணுற்ற அவர் இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.
- தமது இருபத்தி ஒன்பதாம் (29) வயதில் வீட்டை விட்டு வெளியேறிய அவர் "உண்மை" யைத் தேடி ஏழாண்டுகள் அலைந்தார்.
- பல அறிஞர்களை சந்தித்து விளக்கம் கேட்டும் அவருக்கு பேறறிவு கிட்டவில்லை.
- இறுதியாக புத்தகயாவிலுள்ள போதிமரத்தடியில் தவம் செய்தபோது சித்தார்த்தருக்கு பேறறிவு கிட்டியது. அப்போது அவருக்கு வயது முப்பத்து ஐந்து.
- அதன்பிறகு, அவர் புத்தர் அல்லது "ஒளிபெற்றவர்" என்று அழைக்கப்பட்டார்.
- பெனாரசுக்கு அருகிலுள்ள சாரநாத் என்ற இடத்தில் மான் பூங்காவில் புத்தர் தனது முதலாவது உரையை நிகழ்த்தினர்.
- அடுத்த நாற்பத்தி ஐந்து ஆண்டுகள் இடைவிடாத பிரச்சாரத்தை அவர் மேற்கொண்டார்.
- குசிநகரம் என்றவிடத்தில் தனது எண்பதாவது வயதில் அவர் உயிர் நீத்தார்.
- மொக்கலண்ணர், ஆனந்தர், கசபர், சரிபுட்டர், உபாலி ஆகியோர் புத்தரின் முக்கிய சீடர்களாவர்.
- கோசல நாட்டு பிரசேனஜித் மகத நாட்டு பிம்பிசாரர் மற்றும் அஜாதசத்ரு ஆகிய அரசர்கள் அவரது கோட்பாடுகளை ஏற்று சீடர்களாயினர்.

## புத்தரின் போதனைகள்

- புத்தர் கடவுளை ஏற்கவுமில்லை கடவுள் இருப்பதை மறுக்கவும் இல்லை. கர்மவினைக்கு அவர் அதிக முக்கியத்துவம் கொடுத்தார். ஒரு மனிதனின் வாழ்க்கையை அவனது செய்கைகளே நிர்ணயிக்கின்றன.
- ஆன்மா என்ற எதுவும் இல்லை

**புத்தரின் போதனைகள் மூன்று நூல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன**

1. சுத்தபிடகம்
2. வினையபிடகம்
3. அபிதமபிடகம்

**புத்தர் போதித்த நான்கு பேருண்மைகள்**

1. உலகம் துன்பங்கள் நிறைந்தது.
2. துன்பங்களுக்கு காரணம் ஆசையே
3. ஆசைகளைத் துறந்தால் துன்பங்களைத் துடைக்கலாம்
4. ஆசைகளை ஒழிக்க எட்டு நெறிகள்.

எண்வகை வழிகள்

1. நல்ல நம்பிக்கை
2. நல்ல பேச்சு
3. நல்ல வாழும் வழி
4. நல்ல சிந்தனை
5. நல்ல முயற்சி
6. நல்ல நடத்தை
7. நல்ல செயல்
8. நல்ல தியானம்

1. தீபவம்பசம் (கி.பி. 350) - அசோகரது மகன் மகேந்திரனால் இலங்கையில் புத்த மதம் பரவியதை குறிப்படுகிறது.
2. மகாவம்சம் (கி.பி. 550) - தொகுத்தவர் மகாநாமா

## புத்த சமயம் பரவுதல்

- புத்தருக்கு இரண்டு வகை சீடர்கள் உண்டு - பிக்குகள் என்ற புத்த சமயத் துறவிகள், உபாசிகர்கள் என்ற சாதாரண புத்த சமயத்தைத் தழுவிய மக்கள்.
- புத்தரது போதனைகளை பரப்புவதற்கு, புத்த சமயத் துறவிகளைக் கொண்ட சங்கம் அமைக்கப்பட்டது. ஆண், பெண், சாதி வேறுபாடுகளின்றி அனைவரும் சங்கத்தில் உறுப்பினராக சேர்க்கப்பட்டனர்.
- பெண் துறவிகளுக்கு அவர்களது இருப்பிடம் மற்றும் பிரயாணம் குறித்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு இருந்தன.
- சரிபுட்டர், மொக்கலண்ணா, ஆனந்தர் ஆகியோர் புகழ்மிக்க புத்த சமயத் துறவிகளாவர். ஜனநாயக முறைப்படி சங்கம் நிர்வகிக்கப்பட்டது.
- புத்தர் மறைந்து ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்குப் பிறகு மௌரியப் பேரரசர் அசோகர் புத்தசமயத்தை தழுவினார்.
- அசோகர் அனுப்பிய தூதுக் குழுக்கள் மூலமாக, எகிப்து, சிரியா, மாசிடோனியா (மேற்கு ஆசியா). மேலும் அசோகர் புத்த சமயத்தைப் பரப்ப தன் மகன் மகேந்திரனையும் மகள் சங்கமித்திரையையும் இலங்கைக்கு அனுப்பினார்.
- கனிஷ்கர் காலத்தில் பர்மா, ஜப்பான், திபெத் மற்றும் மத்திய ஆசியா நாடுகளுக்கு சீனா வழியாக மதபோதகர்கள் சென்றனர்.

| ஹீனயானம் | மஹாயானம் |
|---|---|
| புத்தரின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர்கள் | புத்தரைத் தெய்வமாக ஏற்றுக்கொண்டவர்கள் |
| உருவ வழிபாடு செய்யாதவர்கள் | உருவ வழிபாடு செய்பவர்கள் |

## இந்தியாவில் புத்த சமயம் மறைய காரணங்கள்

- மக்களின் மொழியான பாலிமொழி புத்தசமயத்தின் மொழியாக இருந்த நிலை கி.பி. முதலாம் நூற்றாண்டுக்குப் பிறகு மாறியது.
- கற்றோர் மொழியான வடமொழியை புத்தசமயம் பின்பற்றத் தொடங்கியது.
- மஹாயண புத்தசமயம் தோன்றிய பிறகு, சிலை வழிபாடும் பூசைகளும் மலிந்தன. இதனால் ஒழுக்கநெறிகள் குறையத் தொடங்கின.
- பிராமண சமயம் புத்துயிர் பெற்றாலும், பாகவத சமயத்தின் எழுச்சியாலும் புத்த சமயத்தின் புகழ் மங்கத் தொடங்கியது.
- மேலும் கி.பி. 5 மற்றும் 6-ஆம் நூற்றாண்டுகளில் நடைபெற்ற ஹீணர்களின் படையெடுப்பாலும்,
- கி.பி.ஏழாம் நூற்றாண்டில் கவுட மன்னர் சசாங்கரால் போதி மரம் வெட்டப்பட்டது. 12-ஆம் நூற்றாண்டில் மேற்கொள்ளப் பட்ட துருக்கிய படையெடுப்புகளின் போதும் புத்தசமய மடாலயங்கள் அழிக்கப்பட்டன.

| புத்த சமய மாநாடுகள் | | | |
|---|---|---|---|
| மாநாடு நடைபெற்ற இடம் | ஆண்டு | தலைவர் / பங்கேற்றவர்கள் | ஆதரித்த அரசர்கள் |
| 1. ராஜகிருஹம் | கி.மு. 483 | மகாகாசபர்/ ஆனந்தா, உபிரலி | அஜாதசத்ரு |
| 2. வைசாலி | கி.மு.383 | சபகாமி | காலஅசோகர் |
| 3. பாடலிபுத்திரம் | கி.மு. 250 | மொகாலி புத்திஸா திசா | அசோகர் |
| 4. குண்டலவானா(காஷ்மீர்) | கி.பி. 100 | வசுமித்திரர்/ பார்சவா,அசுவகோஷர் | கனிஷ்கர் |

## இந்தியப் பண்பாட்டிற்கு புத்த சமயத்தின் பங்களிப்பு

- இந்திய பண்பாட்டு வளர்ச்சிக்கு புத்தசமயம் அரும் பணியாற்றி யுள்ளது. அகிம்சை கோட்பாடு அதன் முக்கிய பங்களிப்பாகும். பிற்காலத்தில் நமது நாட்டின் முக்கிய விழுமியாக அகிம்சைக் கொள்கை விளங்கியது.
- இந்தியக் கலை, கட்டிடக் கலைக்கு புத்த சமயத்தின் பங்கு குறப்பிடத்தக்கது. சாஞ்சி, வல்லபி, நாளந்தா, பார்ஹீத், கயா ஆகிய இடங்களிலுள்ள ஸ்தூபிகள் இந்தியக் கட்டிடக் கலையின் சிறப்புமிக்க சான்றுகளாகும். இந்தியாவின் பல பகுதிகளில் சைத்தியங்களும், புத்த விவரங்களும் அமைக்கப்பட்டன.

- தட்சசீலம், நாளந்தா, விக்ரமசீலா ஆகிய இடங்களிலிருந்த புத்த சமய பல்கலைக்கழகங்களும், பிற கல்வி நிறுவனங்களும் சிறந்த கல்வித் தொண்டாற்றியுள்ளன.
- பாலிமொழி, மற்றும் பிற உள்நாட்டு மொழிகள் வளர்வதற்கு புத்தசமய பிரச்சாரம் காரணமாயிற்று.

**சமண - புத்த சமயங்களுக்கிடைப்பட்ட ஒற்றுமைகள், வேற்றுமைகள்**

| ஒற்றுமைகள் | வேற்றுமைகள் |
|---|---|
| 1. இரு சமயங்களும் கர்மா என்ற தத்துவத்தை ஏற்றுக்கொண்டன. | சமண சமயம் புத்த சமயத்திற்கு மாறாக துறவிகளின் கற்பகத்தன்மையையும், ஆடை-கள் துறந்த வாழ்க்கையையும் வலியுறுத்தியது. |
| 2. இரு சமயங்களும் வேதங்களையும் பிராமணங்களையம் ஒதுக்கித் தள்ளின. | சமணர் உணவை மறுத்து உயிர் விடுதலை போன்ற கடுமையான நோன்பினை மேற்கொண்டனர். |
| 3. இரு சமயங்களும் சமயச் சடங்குகளைத் தவிர்த்தன. | சமண சமயம் அகிம்சையை மிகத் தீவிரமாகப் பின்பற்றியது. |
| 4. இரு சமயங்களும் நன்னெறி சார்ந்த வழிமுறைகளை வலியுறுத்தின. | |
| 5. இரு சமயங்களின் போதனைகளும் மக்களின் மொழியிலேயே போதிக்கப்பட்டன. | |

வாய்மையே வெல்லும்